NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2012

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 8 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. All answers must be in TAMIL.

---

## SECTION A பகுதி ஒன்று

கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்வி களுக்குச் சரியான விடை எழுதுக.

# ஆலமரம்

'ஆல் போல் தழைத்து வாழ்க!' எனப் பெரியோர்கள் வாழ்த்து வார்கள். ஏன் தெரியுமா? ஆல்மரம் கிளைகளும் இலைகளுமாகத் தழைத்துப் பசுமையாக விளங்குவதால்தான் அவ்வாறு வாழ்த்துவார்கள். அத்தகைய ஆலமரம் நமக்குப் பல வகைகளில் பயன்படுகிறது.

ஆலமரம் வெண்மையான பால் உடையது; பாம்புகளைப் போன்று தொங்கும் விழுதுகளை உடையது. இது தன் அடிமரத்தைச் சுற்றிப் பல இடங்களில் விழுதுகளை ஊன்றி வளர்கின்றது. இதற்குக் கான்மரம், பாலி, நிழல் மரம், பழுமரம், தொன்மரம் எனப் பல பெயர்கள் வழங்கு கின்றன. இம்மரம் பல நூற்றாண்டுகள் வரை வாழ்கின்றது.



ஆலம்பழம் உருண்டையாகவும் சிவப்பாகவும் இருக்கும். இம் மரத்தில் எண்ணற்ற பறவைகள் தங்கிப் பழங்களைத் தின்னும்போது இனிய ஒலிகளை எழுப்பும். அவை நம் செவிக்கு இனிமையாக இருக்கும்.

ஆலம் விதை மிகச் சிறியதும் மென்மையானதும் ஆகும். இச்சிறிய விதையிலிருந்து தோன்றி வளர்ந்த மரமோ மிகப்பெரியது.

சாலைவழியே வெயிலில் செல்லும் மக்களுக்கு இனிய நிழலைத் தருகிறது; அவர்களின் களைப்பையும் நீக்குகிறது. 'சிறிய ஆலம்பழத்தின் விதை மீன் முட்டையைவிடச் சிறியது என்றாலும், அவ்விதையிலிருந்து தோன்றும் பெரிய ஆலமரம் அரசனுக்கும், அவனது நால்வகைப் படைகளுக்கும் நிழலைக் கொடுக்கிறது' என்னும் கருத்துள்ள பாடல்மூலம் அதிவீரராமபாண்டியன் என்னும் மன்னன் ஆலமரத்தின் சிறப்பைப் புகழ்ந்துள்ளான். அப்பாடல் 'வெற்றிவேற்கை' என்னும் நூலில் உள்ளது.

சென்னையில் அடையாறு என்னுமிடத்தில் மிகப்பெரிய ஆலமரம் இருக்கிறது. நம் நாட்டிலேயே மிகப்பெரிய ஆலமரம் கல்கத்தா நகரில் இருக்கிறது. உலகிலேயே மிகப்பெரிய ஆலமரம் நம் அண்டை நாடான இலங்கையில் உள்ளது. ஆந்திர மாநிலத்தில் ஒரே சமயத்தில் இருபதினாயிரம் பேருக்கு நிழல் தரக்கூடிய பெரிய ஆலமரம் ஒன்றிருந்ததாம். இப்பெரிய ஆலமரங்கள் விழுதுகளை ஊன்றிநிற்கும் காட்சி கோயில்களில் காணப்படும் ஆயிரங்கால் மண்டபம் போன்றிருக்கும்.

நன்றாக வளர்ந்த மரக்கிளைகளிலிருந்து ஆங்காங்கு விழுதுகள் பல தோன்றுகின்றன. அவை கீழ்நோக்கி வளர்ந்து நிலத்தினுள் புகுந்து வேர்கள் செய்யும் வேலையைச் செய்கின்றன; தாய்மரத்திற்கு வேண்டிய சத்துநீரை உறிஞ்சி அனுப்புகின்றன. கிளைகள் முரிந்து விழாதபடி தாங்குகின்றன. ஆண்டுகள் செல்லச்செல்ல அவ்விழுதுகள் உருவத்தில் பருத்து நெடுந்தூண்கள்போல் ஆகின்றன.

ஆலங்குச்சி பல் துலக்கப் பயன்படுகின்றது. அது துவர்ப்பாக இருக்கும். அது பற்களுக்கு வலுவைத் தருவதால், 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்னும் பழமொழி தோன்றியது. சிறிய ஈர்க்குச்சிகளால் தைக்கப்பட்ட ஆல இலைகள் வாழை இலைபோலப் பயன்படுகின்றன. காய்ந்த ஆலஞ்சுள்ளிகளும் இலைகளும் தீ எரிக்கப் பயன்படுகின்றன. பிளக்கப்பட்ட ஆலங்கட்டைகள் விறகாகப் பயன்படுகின்றன. பவளம் போன்ற ஆலம் பழங்கள் பறவைகளுக்கும், குரங்கு, அணில் போன்ற விலங்குகளுக்கும் உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன. ஆலம் பாலும் ஆலமரப் பட்டையும் மருந்துப் பொருளாகப் பயன்படுகின்றன. ஆலம் பலகைகள் கட்டில், பெட்டி போன்ற பொருள்கள் செய்யப் பயன்படுகின்றன.

ஆலமரம் பல வகைகளில் பயன்படுவதுபோல மாணவர்களும் பெற்றோர்க்கும், உற்றார்க்கும், வீட்டிற்கும், நாட்டிற்கும் பயன்பட வேண்டும். தொண்டுகள் பல செய்து வாழவேண்டும்.

1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை நிரப்புக:

1.1.1 ஆல் போல் ______________ வாழ்க! (1)

1.1.2 இம்மரம் பல நூற்றாண்டுகள் வரை ________________. (1)

1.1.3 அவை நம் ________________ இனிமையாக இருக்கும். (1)

1.1.4 அப்பாடல் "வெற்றிவேற்கை" என்னும் ________________ உள்ளது. (1)

1.1.5 ________________ பல் துலக்கப் பயன்படுகின்றது (1)

1.2 சரியான விடை தருக:

1.2.1 ஆலமரத்திற்கு எவ்வித பால் உடையது? (2)

1.2.2 ஆலமரத்திற்கு பல பெயர்கள் உண்டு.
இரண்டு பெயர்கள் எழுதுக. (2)

1.2.3 ஆலம்பழம் எப்படி இருக்கும்? (2)

1.2.4 சாலை வழியே வெயிலில் செல்பவருக்கு எதை தருகிறது? (2)

1.3 'உண்மை' அல்லது 'உண்மை அல்ல' என்று எழுதுக:

1.3.1 ஆலமரம் நமக்குப் பல வகைகளில் பயன்படுகிறது. (2)

1.3.2 இம்மரத்தில் பூனைகள் மட்டும் தங்கும். (2)

1.3.3 ஆலமரம் மிகவும் பெரிய மரம். (2)

1.3.4 ஒரு மன்னன் ஆலமரத்தின் சிறப்பைப்பற்றி புகழ்ந்துள்ளான். (2)

1.4 ஒருமைக்குப் பன்மை தருக: (எ.டு – நூல் : நூல்கள்)

1.4.1 பெரியோர் : (1)

1.4.2 மரம் : (1)

1.4.3 பாம்பு : (1)

1.4.4 பறவை : (1)

1.4.5 ஈ : (1)

1.4.6 மீன் : (1)

1.4.7 பழம் : (1)

1.4.8 நிழல் : (1)

IEB Copyright © 2012

1.5 எதிர்ச்சொல் தருக: (எ.டு – மேல் : கீழ்)

1.5.1 சிறிய : (1)

1.5.2 அங்கே : (1)

1.5.3 பகல் : (1)

1.5.4 உள்ளே : (1)

1.6 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக:

நாம் ஒருவரைச் சந்திக்கும்போது அவருடன் கை குலுக்கி வணக்கம் கூறுகிறோம். இச்செய்கை நமது நட்பின் அடையாளமாக விளங்குகிறது. ஜப்பான் நாட்டு மக்களிடையே பிறரை மதித்து மரியாதை செலுத்தும் பண்பு இயல்பாய்க் காணப்படுகிறது. அவர்கள் வீட்டில் அல்லது பணிமனையில் ஒருவரைச் சந்திக்கும்போது நன்றாகத் தலை குனிந்து தங்களின் அன்பு கலந்த மரியாதையைத் தெரிவிக்கின்றனர். சாலை ஓரங்களில் தம் நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தால் பலமுறை அவர்கள் தலை குனிந்து வணக்கம் கூறுவர்.

1.6.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

1.6.2 ஆறு வகை பெயர்ச்சொற்கள் எவை? (6)

1.6.3 மேற்காணும் பகுதியிலிருந்து <u>நான்கு</u> பெயர்ச்சொற்கள் எழுதுக. (4)

1.7 ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக: (எ.டு - திருடன் : திருடி)

1.7.1 மருமகன் : (1)

1.7.2 அண்ணன் : (1)

1.7.3 சிறுவன் : (1)

1.7.4 தந்தை : (1)

1.8 சேர்த்து எழுதுக:

1.8.1 தமிழ் + பெண் (1)

1.8.2 அவளை + கண்டான் (1)

1.8.3 பூ + செடி (1)

1.8.4 இரண்டு + ஆயிரம் (1)

1.9 குறிலை நெடிலாக மாற்றி எழுதுக: (எ.டு கல் : கால்)

1.9.1 பல் : (1)

1.9.2 படு : (1)

1.9.3 நம் : (1)

1.10 கீழ்வரும் எழுத்துகளையும் சொற்களையும் வரிசையாய் எழுதுக:

1.10.1 ஆ உ ஊ அ ஈ எ இ ஐ ஔ (2)

1.10.2 காது கடி அவள் ஈசல் கைதி (3)

**60 marks**

## SECTION B பகுதி இரண்டு

1. கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்:

1.1 "கிட்டாதாயின் வெட்டன மற" என்று கொன்றை வேந்தன் தொடரின் படி, நரியும் நண்டும் என்ற கதையைப் பற்றி 6-8 வரிகள் எழுதுக. (8)

1.2 முடிவு செய்க:

1.2.1 ____________________ முன்னறி தெய்வம். (2)

1.2.2 ஆலயந் தொழுவது ______________________ (2)

1.2.3 ஊருடன் பகைக்கின் ______________________ (2)

1.2.4 ஏவா மக்கள் _________________________ (2)

2. திருக்குறள்:

திருக்குறள் என்ற நூலைப் பற்றி 10 – 12 வரிகள் எழுதுக. (12)

3. குயில் பாட்டு:

3.1 கீழ்வரும் வரிகளைப் படித்து சரியான விடை தருக:

கண்ணாலே நான் கண்ட காட்சிதனை என்னுரைப்பேன்
பெண்ணால் அறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினோ!
காதனைப் போற்றும் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைக் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென மானிடரே

IEB Copyright © 2012 

3.1.1 குயில் பாட்டை எழுதியவர் யார்? (2)

3.1.2 இக்கவிதையில் மாடன் யார்? (2)

3.1.3 சின்ன குயிலியைப்பற்றி 4 – 5 வரிகள் எழுதுக. (4)

3.1.4 இளவரசனைப் பற்றி 4 – 5 வரிகள் எழுதுக. (4)

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2012